Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 21, 2022

செவ்வாய்க்கிழமை ஜூன் 21, 2022 | ஒளி: 08 கதிர்: 028 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




# 21 பேருக்கும் பிணை

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் நுழைவாயில்களை மறித்து நேற்று (20) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட 21 போராட்டக்காரர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# சத்தியப்பிரமாணம் செய்யமாட்டேன்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டுள்ள தம்மிக பெரேரா, தனது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பிலான நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரையிலும், பாராளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளமாட்டேன் என உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

அவரது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி, ஐந்து அடிப்படை உரிமை மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த மனுக்கள், உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, யசந்த கோட்டாகொட, அர்ஜூன ஒபேசேகர ஆகியோரின் முன்னிலையில் நேற்று (20) ஆராயப்பட்டன.

தொடர்ச்சி P2

## உக்கு அங்கிகாரம்

அரசியலமைப்பின் 21 ஆம் திருத்த சட்டமூலம், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் அமைச்சரவையில் நேற்று (20) முன்வைக்கப்பட்ட நிலையில், அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சட்டமூலம் வெகு விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சுமையை குறைக்க ஐ.எம்.எப் ஆலோசனை

**பாதுகாப்பு செலவீனங்களை, அரச இயந்திரத்தின் சுமைகளைக் குறைத்தல்**

**எரிபொருள், எரிவாயு, உணவு, உரம், பொது போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படல்**

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு நேற்று (20) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடும் நோக்கத்தில் வருகை தந்துள்ள குழுவினர் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை குறித்து அரச தலைவர்களுடன் ஆழமாக கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மே 9 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரையிலான முதற்கட்ட மெய்நிகர் கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக்கொண்ட முன்னேற்றகரமான நகர்வுகளை கட்டியெழுப்ப, சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் ஆதரிக்கப்படக்கூடிய பொருளாதார வேலைத்திட்டம் பற்றிய விவாதங்களைத் தொடரும் என இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இராணுவ அல்லது பாதுகாப்பு செலவீனங்களை குறைக்கும் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட தற்போது கைவிடக்கூடிய அல்லது பிற்போடக்கூடிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், அரசு இயந்திரத்தின் சுமையான விடயங்கள் மற்றும் எரிபொருள்,




தொடர்ச்சி P2

### இலங்கையில் இருந்து வருவோருக்கு

# புகலிட அனுமதி இல்லை

## அவுஸ். பிரதமர் அறிவித்தார்



புகலிடக்கோரிக்கையாளர்கள் குறித்து மிகத்தெளிவான நிலைப்பாட்டில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உள்ளதாகவும், ஆகவே சட்டவிரோதமாக படகு மூலம் வரும் இலங்கையர்களை அவுஸ்திரேலியாவில் குடியேற்ற தமது அரசாங்கம் அனுமதிக்காது என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### உணவு, சுகாதாரத் தேவைகளுக்கு

# 50 மில். டொலரை ஆஸி. வழங்கும்



இலங்கைக்கு உணவு, சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவுஸ்திரேலியா அரசாங்கம் 50 மில்லியன் அமெரிக்க டொலரை அவசர உதவியாக வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் செனட்டர் பென்னி வோங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எழுபது ஆண்டு கால நகர்வுகளில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியொன்றை தற்போது எதிர்கொண்டு வருகின்றது,

தொடர்ச்சி P2

# சுகாதார பணியாளர்களுக்கு வெள்ளியன்று எரிபொருள்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தகுதியான சுகாதாரப் பணியாளர்களுக்கு பிரத்தியேகமாக எரிபொருள் கொடுப்பனவு ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நெருங்குகிறது பஞ்சம்

■ பா.நிரோஸ்



கோட்டா - ரணில் அரசாங்கம் பதவி விலகி, பொதுவான வேலைத் திட்டத்தின் கீழ் இயங்குவதற்கான சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் சர்வகட்சி அரசாங்கம் அடுத்த தேர்தல் வரையில் செயற்பட வேண்டுமென

தொடர்ச்சி P2

# சிறுவர்கள் மீது மிளகாய்த் தூள் வீசி தாக்குதல்

■ பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை, ரொட்டவெவ மிரிஸ்வெவ பகுதியில், 16 வயதுக்கும் கீழ்பட்ட சிறுவர்கள் அடங்கிய இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதியின் பிறந்த நாளுக்கு சீனா வாழ்த்து

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். அவர் அனுப்பியிருந்த வாழ்த்து மடலை, இலங்கைக்கான சீன தூதுவர், ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று (20) கையளித்தார்.

தொடர்ச்சி P2



# ஆர்ப்பாட்டக்காரர்களை எதிர்த்து ஆயுததாரிகள்

## காலிமுகத்திடல் காலையில் அதிர்ந்தது

'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலகத்துக்குள் செல்லும் சகல வாயில்களை மூடி, நேற்று (20) அதிகாலையில் இருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதுமட்டுமன்றி, நிதியமைச்சின் வாயில்களை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில், நேற்றுக்காலை இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் சற்று தாமதித்தே சென்றனர்.

தொடர்ச்சி P2

# 80 சதவீதமான கல்வி செயற்பாடுகள் ஸ்தம்பிதம்



பிள்ளைகளின் கல்வி உரிமையை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, பாடசாலைகளில் 80 சதவீதமான கல்வி செயற்பாடுகள் கைவிடப்பட்டு உள்ளதாகவும் குற்றம் சுமத்தினார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் பாடசாலைகளில் 80 சதவீதமான கல்வி நடவடிக்கைகள்

தொடர்ச்சி P2

### சு.க பதவிகளில் இருந்து

# நிமலை நீக்குவதற்கு எதிரான தடை நீடிப்பு

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பதவிகளில் இருந்து நீக்குவதற்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை நாளை (22) வரை நீடித்து, கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி பூர்ணிமா பரணகம, நேற்று (20) கட்டளையிட்டார்.

அமைச்சராக பதவியேற்ற, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவை கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்குவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது. இதையடுத்து, கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2



# ஈழத் தமிழ் அகதிகள் முகாமில் போராட்டம்

திருச்சி சிறப்பு முகாமில் தங்கள் விடுதலைக்காக தொடர் உண்ணாவிரதம் இருக்கும் ஈழத் தமிழ் அகதிகள், தமது விடுதலையை வலியுறுத்தி நேற்று (20) போராட்டத்தில் ஈடுபட்டனர். சர்வதேச அகதிகள் தினம் நேற்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஆசியாவின் முத்து' சோமாலியாவானது

■ பா.நிரோஸ்

'ஆசியாவின் முத்து' என ஒரு காலத்தில் கூறப்பட்ட இலங்கை, தற்போது சூடான், சோமாலியா ஆகிய நாடுகளின் நிலைமைக்கு சென்றுவிட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் ராஜித சேனாரத்ன, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவில்லை என்றால் விரட்டியடிப்போம் எனவும் எச்சரித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (20) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலை உபகரணங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# "தீர்வு என்னிடமே உள்ளது"

■ பா.நிரோஸ்

நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டமும் அதனை முன்னெடுத்து செல்லக்கூடிய பொருத்தமான நபர்களும் என்னிடத்தில் உள்ளனர். பிரச்சினைக்குத் தீர்வு என்னிடமே உள்ளது எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்துவிட்டு கோட்டா - ரணில் வீட்டுக்குச் செல்லுங்கள் எனவும் கூறினார்.

தொடர்ச்சி P2

### சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள

# 21 நிறைவேற்ற வேண்டும்



நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, சர்வதேச நாடுகளின் நம்பிக்கையை பெற்றுக்கொண்டால் மட்டுமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணமுடியும். அதனை சரிசெய்யவே 21 ஆம் திருத்தத்தை கொண்டு வருகின்றோம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 19 ஆம் திருத்த சட்டத்தை நீக்கி 20 ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவந்ததன் பின்னர் ஏற்பட்ட

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சத்தியப்பிரமாணம் செய்யமாட்டேன்

அதன்போது, தம்மிக்க பெரேராவின் சார்பில் மன்றில் பிரசன்னமாய் இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

அந்த மனுக்கள் ஐந்தும் இன்றும் (21) உயர்நீதிமன்றத்தால் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் நிதியமைச்சரும் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவின் எம்.பி பதவி வெற்றிடத்துக்கு, வர்த்தகர் தம்மிக்க பெரேராவை நியமித்த தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி, அடிப்படை உரிமை மனுக்கள் 5 உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனுவில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவின் பிரகாரம், பாராளுமன்றத்தில் தேசிய பட்டியலில் வெற்றிடம் நிலவுமாயின், அந்த வெற்றிடத்துக்கு, அந்த அரசியல் கட்சியில் இருந்து தேர்தலில் போட்டியிட்ட அல்லது வேட்பு மனுவில் பெயர் இருக்கின்ற இன்றேல், தேசிய பட்டியல் பெயர் இருக்கின்றவர்களையே நியமிக்கவேண்டும்.

அதனடிப்படையில் பார்க்குமிடத்து வர்த்தகர் தம்மிக்க பெரேரா, மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தவொரு பட்டியலில் உள்வாங்கப்படாதவர். ஆகையால், அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவின் பிரகாரம், தேசிய பட்டியலின் ஊடாக எம்.பி பதவியை வகிப்பதற்கு அவர் எவ்வகையிலும் தகுதியற்றவர் என்றும் அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வர்த்தகரான தம்மிக்க பெரேரா, பல்வேறு துறைகளின் கீழ் பல வர்த்தகங்களுக்குச் சொந்தக்காரர்; அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையோ இன்றேல் அமைச்சர் பதவியையோ வகிப்பாராயின் பக்கச்சார்பு மற்றும் ஆர்வம் தொடர்பிலான பிரச்சினைகள் எழும் என்றும் அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 21 பேருக்கும் பிணை

கைது செய்யப்பட்டோரில் பௌத்த பிக்கு ஒருவரும் 4 பெண்களும், 16 ஆண்களும் உள்ளடங்கியிருந்தனர். அவர்கள் அனைவரும் கோட்டை பிரதான நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்கள் அனைவரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் விடுதலைச் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

காலி முகத்திடலில் கோட்டா கோகம போராட்டத்தளத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்கள், லோட்டஸ் வீதியில் உள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சுக்கு பிரவேசிக்கும் இரண்டு நுழைவாயில்களை நேற்றுமுன்தினம் (19) இரவு மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இதேவேளை, கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் நுழைவாயிலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 போராட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்துள்ளமை தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபை தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார பணியாளர்களுக்கு...

இது அத்தியாவசிய சேவை பணியாளர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற பெரிதும் உதவும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சேவைக்காக நாடளாவிய ரீதியில் 74 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தச் சலுகையை பெறவுள்ள அனைத்து சுகாதார ஊழியரும் தேவையேற்படின் தமது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை எரிபொருள் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அல்லது சுகாதார நிறுவனம், ஊழியரின் பெயர், பதவி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வாகன வகை மற்றும் பதிவு இலக்கம் ஆகியவற்றை நிறுவன தலைவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆவணம், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வாராந்தம் அதிகபட்சமாக மோட்டார் கார்கள் மற்றும் ஜீப்களுக்கு 40 லீற்றர், ஓட்டோக்களுக்கு 15 லீற்றர், மோட்டார் சைக்கிள்களுக்கு 10 லீற்றர் எரிபொருள் வழங்கப்படும்.

# சுமையை குறைக்க...

எரிவாயு, உணவு, உரம் மற்றும் பொது போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படல் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சிறுவர்கள் மீது மிளகாய்த் தூள் வீசி தாக்குதல்

கடந்த 3 நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட கை கலப்புடன் தொடர்புடைய இரு குழுக்களுக்கிடையே தொடர்ந்தும் முறுகல் நிடித்துள்ளது. நேற்று (20) காலையும் கைகலப்பில் இவ்விரு குழுவினரும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கடைக்குச் சென்ற சிறுவனை தாக்கியுள்ளதுடன், மிளகாய் தூள் வீசி தாக்கியுள்ளனர். இதனால் 3 சிறுவர்கள் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மற்றைய குழுவிலுள்ள 2 சிறுவர்களும் அம்பியூலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அந்த 5 சிறுவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் அனைவரும் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிவித்துள்ளனர்.

# 'ஆசியாவின் முத்து' சோமாலியாவானது

எரிபொருள், எரிவாயு, மின்சாரம் என்பன நாட்டில் இல்லாது போயுள்ளன. அதேபோல் வைத்தியசாலைகளுக்கு வரவேண்டிய 50 சதவீதமான வைத்தியர்கள் வைத்தியசாலைகளுக்கு வரமுடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்களை ஒருபோதும் பட்டினியில் போடப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறுகிறார். ஆனால், இலங்கை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இலங்கையில் 10 குடும்பங்களில் வெறும் ஏழு குடும்பங்கள் ஒருவேளை மாத்திரமே உணவை உட்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மந்தபோசணத்தில் உலக அளவில் 7ஆவது இடத்துக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. ஆசியாவில் இரண்டாவது இடத்தில் இலங்கை இருக்கிறது. ஒரு இலட்சம் குழந்தைகளில் 14 குழந்தைகள் மந்தபோசாக்கால் உயிரிழப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சோமாலியா, சூடான் போன்ற நாடுகளின் நிலைக்கு நாட்டை தள்ளுவதற்கா மக்கள் ஆணை வழங்கப்பட்டது? ஆயிரம் குடும்பங்களில் 14 குடும்பங்கள் உணவின்றி தவிர்ப்பதற்கா மக்கள் ஆணை வழங்கப்பட்டது? நாட்டிலுள்ள ஒவ்வொரு வரிசைகளும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்களமாகவே மாறியுள்ளன. அவ்வாறான நிலையில் வரிசையில் நின்றவர்களிடம் அத்துருகிரிய, குருநாகல் போன்ற பிரதேசங்களில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பிலும் இதன்போது தனது கண்டனத்தை தெரிவித்ததோடு பொலிஸாரின் இதயம் இரும்பில் செய்யப்பட்ட இதயம் எனவும் கடுமையாக சாடினார்.

# "தீர்வு என்னிடமே உள்ளது"

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (20) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும். மக்கள் ஆணையை பெறும் வரையில் இந்த அரசாங்கம் தொடரவேண்டும். நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்பதற்கான திறமையான நிபுணத்துவம் கொண்டவர்கள் எம்மிடம் இருக்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. நாட்டு மக்களுக்கும் அவர்கள் நிவாரணம் வழங்க முடியாது. நாட்டை பலப்படுத்த, மக்களை வாழ வைக்க முடியாது எனத் தெரிவித்த அவர், போராட்டம் உருவாக முக்கிய காரணம் பொருளாதாரப் பிரச்சினைதான் எனவும் தெரிவித்தார்.

அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறை மூலம் நாடு ஜனநாயக நிலைக்கு மாறும் வரை நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும், மக்களின் எதிர்பார்ப்புகளுடன் விளையாடி போராட்டத்தை காட்டிக் கொடுக்க முடியாது. தற்போதைய ஜனாதிபதியின் கீழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்காது. அவர்கள் வெளியேறும் போது நாடு மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கான வாய்ப்புகளுக்கான வாயில்கள் திறக்கப்படும்.

தற்போது மாளிகை வர்த்தக மோசடியே இடம்பெற்று வருவதாக தெரிவித்த அவர், மக்களின் அழுத்தத்தை அரசாங்கம் மோசடிகளுக்கு பயன்படுத்துவதாகவும், யார் தவறு செய்தாலும் தவறு தவறுதான்; அது தனி நபர்களுக்கு வேறுபடாது. பொது உடன்பாட்டுக்கான பாலமாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மாற்றப்படும். இதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

# புகலிடத்துக்கு அனுமதிக்காது

படகுமூலம் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவிற்கு வரும் எவரையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் திருப்பி அனுப்பாது என்ற தவறான பிரசாரங்களை ஆட்கடத்தல்காரர்கள் மேற்கொண்டு வருவதாகவும், அதனை எவரும் நம்ப வேண்டாம் எனவும் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய பிரதமர், சட்டவிரோதமாக படகில் வரும் எவரும் இங்கு குடியேறப்பட மாட்டார்கள் என தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலைமை மற்றும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்பதை நாம் அறிவோம், எனினும் அரசாங்கத்தின் உறுதியான கொள்கையில் இருந்து மாற்றம் பெறவில்லை. நீண்ட காலமாக அவுத்திரேலிய அரசாங்கங்கள் முன்னெடுத்த தீர்மானத்துடன் நானும் செயற்பட்டுக்கொண்டுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் உள்ளக விவகாரங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு அமைச்சர் கிளேர் ஓ நீல் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இதன்போது இலங்கையில் இருந்து எவரையும் சட்டவிரோதமாக அவுத்திரேலியாவிற்கு அனுப்புவதை தடைசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்துமாறு அவுத்திரேலிய பிரதமர் வலியுறுத்தியுள்ளதாகவும் நேற்று (20) அவுத்திரேலியா ஊடகங்களுக்கு பிரதமர் தெரிவித்துள்ளார்.

# 50 மில். டொலரை ஆஸி. வழங்கும்

இது நாட்டில் உணவு, மருந்து, எரிபொருள் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது என தெரிவித்துள்ள அவர், அவுஸ்திரேலியா இலங்கையுடன் நெருக்கமான, நீண்டகால நட்புறவை கொண்டுள்ள நாடு என்பதுடன் இலங்கை மக்களுக்கு உரிய நேரத்தில் உதவுவது மட்டுமன்றி, இந்த நெருக்கடி தொடர்ந்தால் பிராந்தியத்திற்கும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை கருத்தில் கொண்டு அவுஸ்திரேலியா இலங்கைக்கு உதவுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவு திட்டத்திற்கு அமைவாக மூன்று மில்லியன் இலங்கை மக்களுக்கு அவர்களின் அவசர உணவு உதவிக்காக உடனடியாக 22 மில்லியன் டொலரை வழங்குவதோடு, 2022-23ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி உதவியாக 23 மில்லியன் டொலரை வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஆபத்தில் உள்ளவர்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதுகாப்பதில் வலுவான முக்கியத்துவத்துடன், சுகாதார சேவைகள் மற்றும் பொருளாதார மீட்புக்கு உதவியாக இருக்கும் எனவும், இந்த உதவியானது, இலங்கையின் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுக்கு அண்மையில் வழங்கிய 5 மில்லியன் டொலருக்கு மேலதிகமாக வழங்கப்படும் நிதியுதவி எனவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# 80 சதவீதமான கல்வி...

முன்னெடுக்கப்படுவது இல்லை என கல்வி அமைச்சின் அதிகாரிகள் கோப் குழுவுக்கு வழங்கிய தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த இரண்டரை வருடங்களாக பிள்ளைகள் எத்தனை நாள்களுக்கு பாடசாலைக்கு சென்றுள்ளனர் என்பதை பெற்றோர்களிடம் கேட்டால் தெரியும். எரிபொருள் தட்டுப்பாடு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் மேலதிக வகுப்புகளுக்கும் பிள்ளைகளை அனுப்ப முடியாத நிலை பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது.

பரீட்சைகளை மையப்படுத்திய கல்வி முறையே இலங்கையில் காணப்படுகிறது. மேலதிக வகுப்புகளை பயன்படுத்தி பரீட்சை எழுதி வந்த மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளும் இல்லாமல் போயுள்ளதாகவும் ஹரினி அமர சூரிய தெரிவித்தார்.

# நிமலை நீக்குவதற்கு எதிரான தடை நீடிப்பு

குறித்த மனுவில், கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, பொருளாளர் லசந்த அழகியவன்ன உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, வழக்கை சமரசம் செய்வது குறித்து மனுதாரர் தரப்புடன் கலந்துரையாடுவதாக குறிப்பிட்டார்.

தீர்வு எட்டப்படாவிடின், இடைக்கால உத்தரவு குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்படும் என்றும் அறிவித்தமைக்கு அமையவே நாளை வரை தடையுத்தரவை நீடித்து, நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 7ஆம் திகதி மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியில் இருந்து அமைச்சர் நிமல் சிறிபால சில்வாவை நீக்குவது அல்லது கட்சிக்குள் செயற்படவிடாமல் தடுப்பது ஆகிய செயற்பாடுகளை இடைநிறுத்தி நேற்று (20) வரை தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு மற்றும் நிறைவேற்றுக் குழுவில் இருந்து நிமல் சிறிபால டி சில்வாவை நீக்குவது, நிர்வாக சபையின் மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்குவது மற்றும் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்குவது அல்லது வேறு ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் பிறந்த நாளுக்கு சீனா வாழ்த்து

அதன்பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில், பிறந்தநாள் வாழ்த்துகளை கூறிய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்க்கு நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன், சீனாவின் தொடர்ந்த நட்புக்கு நன்றியும் கூறியுள்ளார். குறிப்பாக இந்தக் கடினமான காலங்களில். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெறட்டும் என்றும் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது 74 அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளார். அவருக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

# ஆர்ப்பாட்டக்காரர்களை எதிர்த்து ஆயுததாரிகள்

நேற்று (20) காலைவேளையில் போராட்டம் உக்கிரமடைந்ததால், மேலதிக பாதுகாப்புக்கு விசேட படையினர் அழைக்கப்பட்டனர். அவர்கள், ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு உள்ளிட்ட பகுதிகளுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் புகுந்துவிடாத வகையில், வீதிக்குக் குறுக்காக பல வரிசைகளில், மிக இறுக்கமாக நின்றிருந்தனர்.

# நெருங்குகிறது பஞ்சம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். இலங்கை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையை பார்க்கும்போது நாடு சோமாலியா, சூடான் நிலைக்கு சென்றுவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (20) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை கீழ் மட்டத்திற்கு தள்ளியவர் வேறு எவரும் கிடையாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே இதற்கான முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாட்டை கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் நாட்டை கட்டி எழுப்புவதற்கான எந்தவொரு வேலைத்திட்டத்தையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை.

2020 டிசெம்பர் மாதம் அளவிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும் என நாம் எச்சரித்து இருந்தோம். எனினும் இதன்போது ஆளும் தரப்பினர் சிரித்தார்கள். ஆனால், நாட்டை கட்டியெழுப்ப முடியாத நிலைக்குள் அவர்கள் தள்ளி விட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# 21 நிறைவேற்ற வேண்டும்

குழப்பங்களுக்கு மீண்டும் தீர்வு காணவே 21 ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவருகின்றோம். இது குறித்து பரந்த அளவிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

சகல தரப்பினதும் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொதுவான வரைபொன்று உருவாக்கப்பட்டுள்ளது. 21 ஆம் திருத்தம் நிறைவேற்றப்படுவதன் மூலமாக தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என கருதுகின்றோம்.

இப்போது எம்மால் சர்வதேச நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்க முடியாத நிலையொன்று உருவாகியுள்ளது. சர்வதேச நாடுகள் எம்மை நம்பத் தயாராக இல்லை. நாட்டில் சட்டம் ஒழுங்கு மீறப்படுவதாகவும், மனித உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கருதி எம்முடனான உறவை முறித்துக்கொள்ளும் நிலையொன்று காணப்படுகின்றது. ஆகவே அரசியல் ஸ்திரத்தன்மை ஒன்றை உருவாக்கினால் மட்டுமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். இப்போது உருவாக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் பெரும்பாலான விடயப்பரப்புகளில் சர்வசன வாக்கெடுப்பு அவசியம் இருக்காது என கருதுகின்றேன். நீதிமன்றமும் அவ்வாறான அறிவிப்பை விடுக்கும் என எதிர்பார்க்க முடியும் என்றார்.

# வாழ்க்கையை மேம்படுத்தும் யோகா

## சர்வதேச யோகா தினம் இன்றாகும்



வ. சக்திவேல்

**சர்வதேச யோகா தினம் வருடாந்தம் ஜூன் 21ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்தத் திகதி, வடக்கு அரைக்கோளத்தில் மிக நீண்ட நாள் என்பதால், இது ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இருக்கிறது.**











2015ஆம் ஆண்டு முதல், ஐக்கிய நாடுகள் சபையால் உலகம் முழுவதும் ஜூன் 21ஆம் திகதி, சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய நாளில் ஏராளமான பொது மக்கள், உலகெங்கிலும் யோகாசன பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

'யோகா' என்பது சமஸ்கிருதத்திலிருந்து உருவான வார்த்தையாகும். இதன் பொருள் 'சேருதல்' அல்லது ஒன்றுபடுவதாகும். யோகா என்பது, உடல் மற்றும் மனதின் ஒன்றிணைவு என்று அர்த்தமாகின்றது.

நல்ல நோய் எதிர்ப்பு சக்தியுடன் உள்ள ஒருவரது உடல், வைரஸுடன் சண்டையிட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படலாம். நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, வெவ்வேறு யோகாசனங்கள் உதவுகின்றன. அவற்றை பின்பற்றுவதன் மூலம், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிக அவசியம் எனலாம். எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா கட்டுப்பாடுகளால் யோகாசன நிகழ்ச்சிகள் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் நடத்தப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க, சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, 'உடல் வலிமையும் மன வலிமையும் தரும், இந்து சமயத்தின் கொடையாக யோகாசனம் விளங்குகின்றது. நோயற்ற, மருந்துகளற்ற வாழ்வுக்கு அனைவரும் யோகாசனம் பயில்வோம். இதற்கான உத்வேகமளிக்கும் சர்வதேச யோகா தினத்தில் பங்குகொள்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ், இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில், கல்லடியில் அமைந்துள்ள ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் கோவில் முன்றலில் சனிக்கிழமை(19) காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என பலதரப்பட்டோரும் கலந்து கொண்ட, யோகா கண்காட்சி நடைபெற்றது.

டொக்டர் வே. குணராஜசேகரம் இது குறித்து தெரிவிக்கும்போது கூறியிருந்ததாவது: "நான் ஒரு மருத்துவர் என்ற ரீதியில், உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்தின்படி உடல், உளம், சமூக, ஆன்மீகம், ஆரோக்கியம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையில் யோகாசனமும் உடல், உளம், சமூக, ஆன்மீகம், ஆரோக்கியம் ஆகியவற்றை மேன்மை நிலையில் வைத்திருப்பதற்கு வழிவகுக்கின்றது. உடற்பயிற்சி செய்வதன்மூலம் தசைகள், எலும்புகள், நரம்புத் தொகுதி, சுவாசத்தொகுதி, சமிபாட்டுத்தொகுதி உள்ளிட்ட உடற்தொகுதிகள் வலுவடைகின்றன.

"சுவாசப் பயிற்சியின் மூலம் நுரையீரல் வலுவடைகின்றது. இதனால் அதன் கொள்ளளவு அதிகரிக்கின்றபோது, ஒரே நேரத்தில் சுத்தமான ஒட்சிசன் நிறைந்த காற்றை எடுத்து, அசுத்தமான காபனீரொட்சைட்டை அதிகளவு வெளியேற்றுவதன் மூலம், அதிகளவு ஒட்சிசன் உடலிலுள்ள அனைத்து உறுப்புகளுக்கும் செல்கின்றன. இதனால் உடற்றொழிற்பாடு மிக வேகமாக நடைபெறுகின்றது.

"அதுபோல், தியானத்தின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்த முடிகின்றது. எமது சிந்தனைகள் நல்ல சிந்தனைகளாக மாற்றப்படுகின்றன. இதனால் மனநிலை அமைதி பெறுகின்றது. இதனால் உள ஆரோக்கியம் கிடைக்கின்றது. அதுபோல் சமூக ஆரோக்கியமாக குடும்பம், சமூகம், உலகம் நன்றாக இயங்க வேண்டும் என தியானத்தின் மூலம் நாம் சிந்திக்கின்றோம். இதன்மூலம் சமூக ஒற்றுமை, ஒருமைப்பாடு, நபர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு ஒற்றுமையாக வாழக்கூடிய சூழல் உருவாகின்றது. அதுபோன்றுதான் ஆன்மீக ரீதியிலும் இறை சிந்தனை நிலைநாட்டப்படுகின்றது.

"எனவே, யோகாசனம் என்பது எமது மூதாதையல்களால் குறிப்பாக, பதஞ்சலி முனிவரால், தோற்றம் பெற்று, தற்போது உலகம் பூராகவும் பரந்து காணப்படுகின்றது. இதனுடைய முக்கியத்துவம் எல்லோராலும் அறியப்பட்டிருக்கின்றது.

"கடந்த வருடம், ஜப்பானில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், யோகாசனத்தை ஓர் அங்கமாக ஏற்று, யோகாசனத்தை நடத்திக் காட்டியிருந்தமை இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். எனவே, அனைவரும் தினமும் குறைந்தது அரை மணித்தியாலம் தொடக்கம் ஒரு மணித்தியாலமாவது யோகாசனத்தை மேற்கொண்டு, நாமும் எமது சமூகமும் முன்னேற வேண்டும்" என்றார்.

இந்நிலையில், "யோகாசனம் ஆசனம், பிரணாயாமம், தியானம், ஆகிய மூன்று தளங்களைக் கொண்டது. யோகாசனம், உடல் இழுவைப் பயிற்சியை முழுமையாக உள்ளடக்கியதாகும். பிரணாயாமம் உடலையும் உள்ளத்தையும் இணைத்து, அதனை வலுப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாக இருக்கின்றது. தியானம் முற்றுமுழுதாக உளஆரோக்கியத்தை மையமாக வைத்து, உள்ளத்தை மேன்மைப்படுத்துகின்றது.

"உலகத்திலே எந்த விதமான பயிற்சிகளும் உடல் உள ஆலோக்கியத்தை ஒன்றிணைத்த பயிற்சியாக இல்லாமல், இந்த யோகாசனம் மாத்திரம், இதனை உள்ளடக்கியிருப்பது யோகாசனத்தின் பெருமையாகும். இது 5,000ஆண்டுகளுக்கு முன்னர் பதஞ்சலி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டு இருந்தாலும், தற்போது அகில உலகமும் 2015இல் இதனை ஏற்றுக் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபை இதனை ஒரு தினமாகப் பிரகடனப்படுத்தி, அத்தினத்தில் அனைவரும் யோகாசனம் தொடர்பான அறிவையும் விழிப்புணர்வையும் பெறவேண்டும் என நினைத்து யோகாசனத்துக்குக் கிடைத்துள்ள பெருமையாகும்" என மட்டக்களப்பிலுள்ள ஐஸ்வரியம் யோகா ஸ்தாபகர் சிறிதரன் தெரிவிக்கின்றார்.

யோகாசனம் என்பது, யோகா வாழ்க்கை முறையில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு உடல் தோரணைகளைக் குறிக்கும். நோயற்ற வாழ்வுக்கும் உடல் பலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் யோகாசனங்கள் வழிவகை செய்கின்றன.

யோகா, நாம் அன்றாடம் செய்ய வேண்டிய பயிற்சியாகும். ஒரு சில யோகாசனங்களையாவது தேர்ந்தெடுத்து, நமது அன்றாட வாழ்வின் பயிற்சியாக அவற்றை செய்வது நமக்கு நீடித்த நலம் பயக்கும்.

அண்மைக் காலமாக யோகாவின் முக்கியத்துவத்தை பல நாடுகளும் புரிந்து கொண்டு, தினமும் யோகா பயிற்சிகளைப் பயின்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே, தற்கால இயந்திர உலகில், நச்சு உணவுகளையும் விரைவான உணவுகளையும் உண்டு வரும் உலகில், இவ்வாறான யோகாப் பயிற்சிகளை தினமும் கைக்கொள்ளும் பட்சத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வை மேம்படுத்த உதவும் என்பதுவே யோகிகளினது கருத்தாகும்.

எம் மக்களுக்கு உதவி செய்ய

# புலம்பெயர் தமிழர்கள் தயாராக இருக்க வேண்டும்



எதிர்வரும் காலங்களில் இலங்கையில் எதிர்கொள்ளும் உணவு பஞ்சத்தின் போது எம் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். சுவிஸில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்த போது வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியினை செய்வதற்காக எங்களது புலம்பெயர் தமிழர்கள் உதவி செய்வார்கள். ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வைத் தர வேண்டும் என கூறியிருக்கின்றோம். ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது.

இன்று எங்களுடைய அரசியலை பொறுத்தவரையில், தமிழர்களுக்கு இரண்டு வகையான அரசியல் பிரச்சினைகள் காணப்படுகின்றன. எங்களது கடந்த கால வரலாறுடன் நாங்கள் எவ்வாறு முகங்கொடுப்பது? இவற்றில் எதிர்காலத்தில் எங்களுக்கு இருக்கின்ற விடயங்களை பார்த்தால் அரசியல் தீர்வு என்ற விடயம் எங்களுக்கு மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவற்றை நாம் சமாந்தரமாக கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

# அரசியலமைப்பு மாற்றம் நெருக்கடிக்குத் தீர்வாகாது

அரசிலமைப்பை மாற்றுவதால் நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது. நீண்டகாலமாக அரசியலமைப்பு மாற்றம் குறித்து பேசி காலத்தை கடத்தியுள்ளனர். ஒரு சிலரது தனிப்பட்ட நோக்கங்களுக்காக அரசியலமைப்பை மாற்றுவதில் அர்த்தமில்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாட்டின் சொத்துகளை சூறையாடும், வளங்களை கொள்ளையடிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கங்கள் தவறியமை நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு பிரதான காரணமாக கருதுகின்றேன். சுயாதீனமாக செயற்பட வேண்டிய முக்கிய நிறுவனங்கள் நியாயமாக செயற்படவில்லை. நீதிக்கட்டமைப்பு, சட்டம் ஒழுங்கு முறையாக செயற்படாதமை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதேபோல் இன்றைய அரசியல் கலாசாரமும், அதனுடன் கூடிய செயற்பாடுகளும் நாட்டை நாசமாக்கியது. உயரிய சபையான பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பலர் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள். சகல விதமான சட்டவிரோத செயற்பாடுகளிலும் இவர்கள் பங்குதாரர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்களையே அரசியல் தலைவர்கள் என மக்கள் தெரிவு செய்து வருகின்றனர்.

அரச பொறிமுறையில் சகல பக்கமும் ஊழல் பரவிவிட்டது. ஊழல் என்பது நாட்டின் கலாசாரமாக மாறிவிட்டது. இதில் இருந்து விடுபடும் வரையில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அதுமட்டுமல்ல வீழ்ச்சிகாணும் மூன்றாம் தரப்பு நாடாக நாம் காணப்பட்ட போதிலும் அபிவிருத்தியடைந்த நாட்டைப்போல் செயற்படுகின்றமை தவிர்க்கப்பட வேண்டும். அநாவசிய செலவுகள், வீண் ஆடம்பரம் கைவிடப்பட வேண்டும். இந்த மாற்றங்களை ஏற்படுத்தாது நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றார்.


# கம்பஹா பிரதேச சபை

**வாடகை அடிப்படையில் கெப் வண்டியொன்றை பெற்றுகொள்வதற்காக விலைமனு கோரல்**

கொள்முதல் இலக்கம் - AS/01/2022

கம்பஹா பிரதேச சபையின் அலுவலக கடமைகளுக்காக 06 மாத காலத்திற்கு 4WD வகையிலான கெப் வண்டியொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

02. அதற்கான மேலதிக தகவல்களை www.gampaha.ps.gov.lk கம்பஹா மாநகர சபையின் இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

03. குறிப்பிடப்பட்ட கெப் வண்டியானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் இருக்கவேண்டும்.

- 2015 – 2020 ஆம் ஆண்டிற்குற்பட்ட உற்பத்தி இயந்திர திறன் 2450CC – 3000CC க்கு உற்பட்ட உலகப் புகழ்பெற்ற குறியீட்டுப் நாமத்தையுடைய வாகன வகையை கொண்டிருத்தல் வேண்டும்.
- இயங்கும் மீட்டரானது கிலோ மீற்றர் 100,000 க்கு குறைவாக இருத்தல் வேண்டும் மேலும் பரிமாற்ற அமைப்பு ஒடோமெடிக் அல்லது மெனுவலாக இருத்தல் வேண்டும்
- முழுமையாக காற்றுச்சீரமைப்பி மற்றும் சக்திவாய்ந்த சுக்கானம் (Power Steering) உடன் தானியங்கி தடுப்புகருவி அமைப்பு (ABS) இயக்கக்கூடிய சாரதி மற்றும் முன் இருக்கை பயணிக்கு இருக்கை படி மற்றும் காற்று பை (Air bags) உடன் கூடிய பாதுகாப்பான வண்டியாக இருத்தல் வேண்டும்.
- வாடகை பாதுகாப்புடன் கூடிய பரிபூர்ண காப்புறுதி இருத்தல் வேண்டும். (கலவரம், திடீர் விபத்து, தீ காப்பீடு, இயற்கை பேரழிவுகள், திருட்டு, மூன்றாம் நபர் காப்பீடு குறைந்தபட்சம் ரூ. 03 லட்சம் ஆக இருக்க வேண்டும், ஒவ்வொரு பயணிக்கும் தனியார் தனிநபர் காப்பீடு குறைந்தபட்சம் ரூ. 50000.00 ஆக இருக்க வேண்டும், சாரதிக்கான தொழிலாளர் இழப்பீட்டுக்கான காப்பீடு பயங்கரவாத பேரிடர் காப்பீடு உள்ளடங்களாக இருத்தல் வேண்டும் மற்றும் அனைத்து இணைப்புகளும் மேற்கோளுடன் இணைக்கப்பட வேண்டும்.
- புதுப்பித்தல் அல்லது திடீர் விபத்து சூழ்நிலையின் போது அதற்கான புதுப்பித்தல் திட்டமிட்ட நேரத்தில் ஏலதாரரினால் மேற்கொள்ளப்பட வேண்டும் மேலும் வாகனம் இயந்திர கோளாறு இல்லாமல் இருக்க வேண்டும் மேலும் வாகனம் துரப்பிடித்தலுக்கு உள்ளாதவாறு உட்புறம் திருப்திகரமான நிலையில் உள்ள 4WD அமைப்பு மற்றும் பிற அமைப்புகள் முழுமையான செயல்பாட்டு நிலையில் இருக்க வேண்டும்.
- வாகன சேவை அல்லது பழுதுபார்க்கும் பணியின் போது, பழுதடைந்தால் அல்லது விபத்துகளின் போது, அதே தயாரிப்பு மற்றும் மாதிரியின் மாற்று வாகனம் 24 மணி நேரத்திற்குள் கிடைக்க வேண்டும்.
- வாகனத்திற்கு சாரதி மற்றும் எரிபொருள் வழங்கப்பட வேண்டும் மேலும் வாகனம் மாதத்திற்கு குறைந்த பட்சம் 3000 கிமீ (சேவை மற்றும் பழுதுபாரத்தல் தவிர்த்து) பயனிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கான மாதாந்த கட்டணம் மற்றும் 3000 கிலோ மீற்றருக்கு மேல் கூடுதலாக அதிகரிக்கும் கிலோ மீற்றருக்கான கட்டணங்களை உங்களால் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட வேண்டும்.

04. 2022.06.20 ஆம் திகதி முதல் 2022.07.07 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை உள்ள காலப்பகுதியில் மீள செலுத்தப்படாத ரூ.1000.00 ம் (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணம் மூலம் செலுத்தி எழுத்து மூலம் விண்ணப்பத்தினை சமர்பிப்பதின் மூலம் நிர்வாக பிரிவில் விலைமனு விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களை 033-2220144 / 077-8083381 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி பிணையாக ரூபா. 5000.00 (ஐந்தாயிரம் ரூபாய்) பணத்தினை கம்பஹா பிரதேச சபையில் வைப்பிலிட்டு அந்த பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இனைத்து சமர்பிக்கப்பட வேண்டும்.

06. விலைமனு அசல் மற்றும் பிரதியை ஒழுங்கமைத்து 2022.07.11 ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட"** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கவோ அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் செயலாளரின் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட முடியும். வாடகை அடிப்படையில் கெப் வண்டியொன்றை பெற்றுகொள்வதற்காக விலைமனு கோரல் என்று குறிப்பிட்டு அசல் அல்லது நகல் பிரதி என்று கடிதவுறையின் மேற் பக்க மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்ததும் வருகைதந்திருக்கும் ஏலதாரர் / பிரதிநிதி முன்பாக கம்பஹா பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் வைத்து விலை மனுக்கள் திறக்கப்படும்.

07. இந்த விலைமனுக்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச சபையின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**டபிள்யூ.ஏ. ரஞ்சித் குணவர்தன,**
**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**கம்பஹா பிரதேச சபை,**
**மிரிஸ்வத்த,**
**முதுன்கொட.**
**2022.06.17**

உரம், கிருமிநாசினிகளை

# பதுக்கியோர் சிக்கினர்

■ எம்.எஸ்.எம். ஹனீபா




அம்பாறை மாவட்டத்தில் உரம், கிருமிநாசினி என்பவற்றை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து, கூடுதல் விலைக்கு விற்பனை செய்த கிருமிநாசினி விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த நவரத்ன பண்டார, திங்கட்கிழமை (20) தெரிவித்தார்.

உரம், கிருமிநாசினி என்பவை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், பொறிக்கப்பட்டுள்ள விலை அழிக்கப்பட்டு, புதிய விலை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் விவசாயிகளால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம் முறைப்பாட்டையடுத்து சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கத்திக்கு உட்பட்ட அட்டப்பள்ளம், நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புலானாய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது அதிகூடிய விலைக்கு கிருமிநாசினிகள், உர வகைகள், காலவதியான பாவனைக்குதவாத கிருமிநாசினிகள் விற்பனை செய்த வியாபாரிகள் கண்டறியப்பட்டனர். அவர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.



அம்பாறையில் வீதிகள் வெறிச்சோடின

# கால்கடுக்க மக்கள் காத்திருந்தனர்

■ சகா

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வழங்கப்படுவதால் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முழுமையாக மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சுமார் 2 முதல் 5 கிலோ மீட்டர் வரை நிரையாக தத்தமது வாகனங்களுடன் அதிகாலை முதல் மாலை, இரவு என காத்திருந்து எரிபொருளை பெற்றுச்செல்வதுடன், எரிபொருள் இடையிலேயே தீர்வதால் ஏமாற்றத்துடன் மற்றுமொரு தொகுதியினர் வீடு திரும்புவதை அவதானிக்க முடிகின்றது.

அம்பாறை மாவட்டத்திற்கான எரிபொருட்கள் சுழற்சி முறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வருவதுடன் இணைய வழியூடாக மக்கள் அறிந்து குறிப்பிட்ட எரிபொருள் நிலையத்தை வந்தடைகின்றனர்.

அத்துடன் குறித்த எரிபொருள் நிலையங்களில் எவ்வித ஒழுங்கமைப்புகள் இன்றி மக்கள் அதிகளவாக குவிந்து காணப்படுவதால், எரிபொருள் விநியோகம் சீரற்ற முறையில் வழங்கப்படுகின்றது.

இதனால் சில இடங்களில் பொதுமக்களுக்கும், எரிபொருள் ஊழியர்களுக்குமிடையே முரண்பாடுகள் உருவாகின்றன.

இதனைதொடர்ந்து, இராணுவம், பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய அவ்விடத்தில் இருந்து பொதுமக்கள் அகன்று செல்வதை தினமும் காண முடிகின்றது.

## இரத்ததான நிகழ்வு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் ஹெல்ப் எவர் அமைப்பானது 'வறுமையை ஒழித்து வளர்ச்சியை காண்போம்' எனும் கருப்பொருளில், சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த அமைப்புடன், மட்டக்களப்பு எச்.என்ட்.டி தாதிய பாடசாலை இணைந்து இரத்ததான முகாமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவு வைத்தியர் ஹரிஷாந், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், ஹெல்ப் எவர் அமைப்பின் உறுப்பினர்கள், எச்.என்.டி தாதியர் பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# எரிபொருள் கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

■ கனகராசா சரவணன்




மட்டக்களப்பு, தாண்டவன்வெளி சந்தியில் எரிபொருள் கோரி மட்டக்களப்பு - கொழும்பு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை பொலிஸார் அங்கிருந்து துரத்தி வெளியேற்றினர்.

குறித்த பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில், பெற்றோலுக்காக மோட்டார்சைக்கிள்கள், ஓட்டோக்கள் உட்பட வாகனங்களுடன் மிக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இல்லை எனவும், பெற்றோல் வராது எனவும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வரிசையில் காத்திருந்த மக்களிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து, வரிசையில் காத்திருந்த மக்கள் வீதியை மறித்து வாகனங்களைச் செல்லவிடாது, பெற்றோல் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, போக்குவரத்து தடைப்பட்டதுடன் பதற்ற நிலை ஏற்பட்டது

இந்தப் பதற்ற நிலையைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு மட்டு. தலைமையக பொலிஸ் பெறுப்பதிகாரி பி.கே. ஹொட்டியாராச்சியின் தலைமையிலான, பொலிஸார் சென்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பெற்றோல் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வரமாட்டாது. எனவே வீதியை விட்டு விலகி வீடுகளுக்கு செல்லுமாறு கோரினார்.

மேலும், அதனையும் பொருட்படுத்தாது வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து பொலிஸார் கலைத்து ஆர்ப்பாட்டகாரர்களை வெளியேற்றினர்.

யாழில் இரண்டு வாரங்களில்

# 41 வழக்குகள் தாக்கல்

■ என்.ராஜ், எம்.றொசாந்த், வினோத்



யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 41 புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் என்.விஜிதரன் தெரிவித்தார்

மொத்த வியாபார நிலையங்கள், மூன்றுக்கும் மேற்பட்ட அரிசி ஆலைகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் பின்னரே இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றார்.

அத்தோடு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களிடம் அரிசி இருப்பு தொடர்பிலும் ஆராய்ந்திருக்கின்றோம்.

விலை மாற்றம் தொடர்பில் மூன்று வழக்குகளும், பதுக்கல் தொடர்பில் வழக்கொன்றும், கட்டுப்பாட்டு விலையை மீறியோருக்கு எதிராக 10 வழக்குகளும் அரிசி சம்பந்தமாக 41 வழக்குகளும் தாக்கல் செய்துள்ளோம் என்றார்.

## வழிப்பறி கள்வர் மடக்கிப்பிடிப்பு

■ எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி வல்லைப்பகுதியில், வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு இளைஞர்கள், பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இறைச்சி வியாபாரி ஒருவரின் 3 இலட்சம் ரூபாய் பணத்தை நேற்று முன்தினம் (19) கொள்ளையிட்ட போது, ஒருவர் பிடிபட்டதுடன், மற்றுமொருவர் தப்பிச் சென்று, நாவல் காட்டு பகுதியிலுள்ள கோவில் கேணியில் கால் கழுவிக் கொண்டிருந்த போது சிக்கியுள்ளார்.

குறித்த இளைஞனிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் கைப்பற்றப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், இளைஞர்கள் இருவரையும் அழைத்துச் சென்றதுடன், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## முதியவர் கொலை

■ எம்.றொசாந்த், வினோத்



யாழ்ப்பாணம், கீரிமலையில் வீடொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட முதியவர் நடராசா (வயது-63), கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 42, 62 வயதுகளையுடைய இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5,000 ரூபாய் பணம் திருடப்பட்டமை தொடர்பாக எழுந்த முரண்பாட்டை அடுத்தே, இந்தக் கொலை நடந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த காங்கேசன்துறைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஒட்சிசன் இயந்திரத்தில் இரும்புத் துகள்கள்

■ யது பாஸ்கர்



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு ஒட்சிசன் நிரப்பும் இயந்திரத்துக்குள் இரும்புத் துகள்கள் போடப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த இயந்திரத்துக்குள், சில விசமிகளால் திட்டமிட்டு 2018இல் மணல் போடப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு உடனடியாக திருத்தி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 15 ஆம் திகதி குறித்த இயந்திரத்துக்குள் மீண்டும் இரும்பு துகள்கள் போடப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசனை நிரப்பிக்கொள்வதற்கு 99 சிலிண்டர்கள் அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு சி.சி.டி.வி பதிவுகளை வைத்தியசாலை நிர்வாகம் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழில் ஆசிரியர்கள் நேற்றும் போராட்டம்

■ எம்.றொசாந்த்


யாழ்ப்பாணத்தில் சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக, எரிபொருட்களை வழங்கக் கோரி நேற்று (20) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு உரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும். அல்லது தமக்கான எரிபொருளை பெறுவதற்கு, குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை ஒதுக்குமாறும் கோரியே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## ஊடகவியலாளருக்கு எதிராக முறைப்பாடு

■ மு.தமிழ்ச்செல்வன்




கிளிநொச்சியில் உள்ள ஒரு முன்னணி பாடசாலையில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்தவரிடம் வெள்ளிக்கிழமை (17) விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலையின் அதிபரால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், முறைகேடுகளை சமூக வலைத்தளம் மூலம் வெளிப்படுத்தியதோடு, உரிய திணைக்களம் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் குறித்த ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில் தனது ஊழல், முறைகேடுகள் தொடர்பான ஆவணங்கள் பொதுவெளியில் வெளிவருவதனை தடுக்கும் நோக்கில் பாடசாலை அதிபரால் பொலிஸாரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

எனினும், ஆதாரங்கள், ஆவணங்களுடன் முறைகேடுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக தம்மால் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது எனத் தெரிவித்த கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திக் குழுவினருக்கு கூறியுள்ளனர்.

பெருந்தோட்ட மக்களுக்கு

# விசேட பொறிமுறை அவசியம்

“தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரணத் திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும்” என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

இன்று நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது. எரிபொருள் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

இந்நிலைமை நாட்டின் அனைத்து துறைகளின் செயற்பாட்டையும் ஸ்தம்பிதம் அடையச் செய்திருக்கின்றது. குறிப்பாக, பொருட்களின் தட்டுப்பாடு ஒருபக்கம் இருக்க, கிடைக்கப்பெறும் பொருட்களின் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருக்கின்றது.

வழமையான நாள்களிலேயே முறையான விநியோக வழிமுறையில்லாத தோட்ட பகுதிகள், பெருமளவு பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றன. இச்சூழ்நிலையில் உடனடியாக தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரணத் திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும்.

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மிக மோசமான நிலையில் இருப்பதால், தோட்ட மக்களை பாதுகாக்க விசேடதிட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே, அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கென தனியான நிவாரண திட்டமொன்றை முன்னெடுத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் பாரபட்சத்திற்கு மத்தியில் மிக மோசமான பாதிப்பை மலையகத்தின் தோட்ட மக்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

இன்றைய அரசாங்கத்திற்கு எமது மக்களின் வாக்குகளை



பெற்றுக்கொடுத்தவர்கள் “அரசில் இருந்து வெளியேறிவிட்டோம்” எனக் கூறி, தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியாது. இன்றைய அனைத்து நிலைமைகளுக்கும் இவர்கள் பொறுப்பு கூற வேண்டும் என்றார்.

# பாம்பு தீண்டி குழந்தை மரணம்

■ சுமணசிறி குணதிலக

விரியன் பாம்பு தீண்டியதில் மூன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

மொனராகலை, கொலன்சின்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழந்தை மேலும் சில குழந்தைகளுடன் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த போதே, விரியன் பாம்பு குழந்தையின் காலை தீண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து குழந்தை மொனராகலை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



பல நாள்களின் பின்னர்

# நுவரெலியாவுக்கு மண்ணெண்ணெய்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

நுவரெலியா நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு பல நாள்களின் பின்னர், நேற்று (20) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6,600 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன், அதனை கொள்வனவு செய்ய இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வருகை தந்திருந்தனர். குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களால் 1,500 பேருக்கு டோக்கன் வழங்கப்பட்டதுடன் தலா 300 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டோக்கன்களுக்கு மேலதிகமாக வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு மற்றுமொரு நாளில் மண்ணெண்ணெயை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.






# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு...



வத்தேகம, மாவுசா தமிழ் வித்தியாலயத்திலும் நெல்லிமலை, சிவனேஷ்வரா தமிழ் வித்தியாலயத்திலும் தெரிவுசெய்யப்பட்ட 1,000 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் வழங்கிவைக்கப்பட்டன.

(படங்கள்: மெய்யன்)



ட்ரக் வண்டியில் சிக்கி வியாபாரி மரணம்

# சந்தேகநபர்கள் மூவர் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

குத்தகை நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட ட்ரக் வாகனத்துக்கு உரிய முறையில் குத்தகை செலுத்தாமை காரணமாக, அதனை மீண்டும் கொண்டு செல்ல வந்த குத்தகை நிறுவன கையாட்களிடமிருந்து அதனை மீட்க போராடிய வியாபாரி ஒருவர், அந்த வண்டியில் சிக்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஒருவர் கலகெதர பிரதேசத்தில் மறைந்திருந்த வேளை கைதுசெய்யப்பட்டதுடன், ஏனைய இருவரும் பேராதனை பொலிஸ் நிலையத்தில் ஆஜரானபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொல்கொல்ல-மிகமனவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தமது வீட்டுக்கு முன்பாக சீமெந்து கல் தயாரிக்கும் வர்த்தகத்தை முன்னெடுத்து வந்ததுடன், கண்டி நகரிலுள்ள குத்தகை நிறுவனம் ஒன்றிலிருந்து ட்ரக் வண்டியொன்றையும் பெற்றுள்ளார்.

கொரோனா தொற்று பரவலால், குறித்த வண்டிக்கான குத்தகையை செலுத்த முடியாமல் போனதால், குத்தகை நிறுவன உரிமையாளருக்கும் இந்த வியாபாரிக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு வந்துள்ளன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் (18) அதிகாலை இரண்டு மணியளவில், தமது வீட்டுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரக் வண்டியை யாரோ திருடுவது போன்று சத்தம் கேட்டுள்ளது.

இதனையடுத்து சிலர் தமது ட்ரக் வண்டியை எடுத்துச் செல்வதை கண்ட அவர் , பின்னால் ஓடிச் சென்று அதனைத் தடுத்த போது, தவறி ட்ரக் வண்டி சக்கரத்துக்குள் விழுந்து காயமடைந்து கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, குத்தகை நிறுவன உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், டரக் வண்டியை கடத்துவதற்கு வந்த 3 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# ரூ.1,000 கதைத்தாலும் ரூ.2,500க்கு மேல் தேவை

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

தொடர்ந்தும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவாலும் ஊதிய பற்றாக்குறையாலும் பெருந்தோட்ட மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பற்றி நாம் கதைத்துக் கொண்டு இருக்கின்றோம். ஆனால், இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப குறைந்தது ஒரு நாளைக்கு 2,500 ரூபாய் தேவைப்பாடு இருக்கின்றது என்றார்.

நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்;

உணவுக்கு மட்டுமே இவ்வாறு என்றால் ஏனைய சுகாதாரம், கல்வி, போக்குவரத்து என்பனவற்றுக்கு இன்னமும் செலவுகள் அதிகரிக்கும். ஆகவே, பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் நிலையான தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஒருநாள் பாராளுமன்றம் கூடுவதற்கு 80




இலட்சம் ரூபாய் வரை செலவாகின்றது. அவ்வாறு கூடுகின்ற பாராளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

எதிர்க் கட்சியும் ஆளும்கட்சியும் குறைகூறிக் கொள்வது மட்டுமே அங்கே நடக்கின்ற நிலையில், பாராளுமன்றத்தை இணைய நிகழ்நிலையில் நடத்துவதே சாலச்சிறந்தது என்றார்.

ஹட்டன் கல்வி வலய செயற்பாடுகள்

# வழமைபோல் நடைபெற்றன

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் கல்வி வலயத்திலுள்ள பெருந்தோட்ட பாடசாலைகள், நகர்புற பாடசாலைகளில் நேற்று (20) ஆசிரியர், மாணவர்களின் வரவு வழமை போல் காணப்பட்டது என, ஹட்டன் கல்வி வலய அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய, நேற்று (20) காலை மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்களின் உள்ளிட்டவர்களின் பயணங்களை இலகுவாக்க இ.போ.ச பஸ்களும் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

எனினும் ஹட்டன் நகரிலிருந்து தினமும் தூர சேவைகளில் ஈடுபட்டு வந்த பல தனியார் பஸ்கள் எரிபொருள் இன்மையால் சேவையிலிருந்து நேற்று விலகியிருந்தன.



ஹட்டன் இபோ.ச பஸ் டிப்போவிலிருந்து

# தனியார் பஸ்களுக்கு டீசல்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போ மூலம் இன்றிலிருந்து (21) தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஹட்டன் டிப்போ முகாமையாளர் டபிள்யூ. ஜி.கே. கீர்த்திரத்ன தெரிவித்துள்ளார்.

ஹட்டனிலிருந்து குறுகிய தூர சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு




வாரத்துக்கு 100- 150 லீற்றர் டீசலை வழங்கவும் தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு தினமும் 100 லீற்றர் டீசலை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் தினமும் 20 - 30 பஸ்களுக்கு டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பஸ்கள் தொடர்பான சுற்றுநிருபம், ஹட்டன்-தனியார் பஸ் சேவை அலுவலகத்திடமிருந்து கோரப்பட்டுள்ளது என்றார்.

பசறையில் ஏற்பட்ட அமைதியின்மை

# கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது

■ ராமு தனராஜா

ஏழு நாள்களுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் (19) பசறை தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

ஆனால், சுமார் இரவு 11மணியளவில் பெற்றோல் தீர்ந்ததையடுத்து, எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும் பொலிஸாரின் தலையீட்டால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதையடுத்து, பெற்ரோலுக்காக காத்திருந்தவர்கள் கலைந்து சென்றனர்.

டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக, பசறை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாக நேற்றைய தினமும் நீண்ட வரிசை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய கிளை அங்குரார்ப்பணம்

■ மொஹொமட் ஆஸிக்

அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளை, சர்வதேச மனித உரிமைகள் மற்றும் நலன்புரி அமைப்பு என்பவற்றின் ஊவா மாகாணக் கிளை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கான அங்கத்தவர்கள் ஒன்று கூடல் ஹப்புத்தளையில் நடைபெற்றது. அதில், ஊவா மாகாண மத்திய குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



# பஞ்சம் ஏற்படும் அபாயத்துக்கு ரஷ்யா வித்திட்டுள்ளது

மூலப்பொருள் கிடைக்குமாயின் அதிலிருந்து பிரித்துப்பிரித்து இதரப் பொருட்களை உற்பத்திச் செய்வதன் ஊடாக, ஏகநேரத்தில் பலருடைய பல்வகையான தேவைகளையும் பூர்த்தி செய்துக்கொள்ள முடியும். ஆனால், முடிவுப்பொருளை மட்டுமே நம்பியிருப்பது, கடன்தொகை எகிறிகொண்டே செல்லும். தேவைகளும் அதிகரித்துக்கொண்டே செல்லும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் எரிபொருள் பிரச்சினை பாரிய தலையிடியாக இருக்கின்றது. அந்த வரிசைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. பெற்றோல் அல்லது டீசலை இறக்குமதி செய்வதிலேயே அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றது.

எரிபொருளின் மூலப்பொருளான மசகு எண்ணெயை இறக்குமதி செய்து, சுத்திகரிக்கும் முறைமையை சீர்படுத்தினால், அவற்றிலிருந்து மண்ணெண்ணெய், தார் உள்ளிட்ட இன்னும் இதர பொருட்களை உற்பத்தி செய்துக்கொள்ளலாம். இவை, ஏககாலத்தில் பல தேவைகளை பூர்த்திச்செய்வதாய் அமையும்.

இதனிடையே உலகில் பஞ்சம் ஏற்படும் அபாயத்துக்கு ரஷ்யா கொண்டு செல்கின்றது என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது. இலங்கையும் பஞ்சத்தின் விளிம்பிலேயே நின்று கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலைமை, இன்னும் இரண்டொரு வாரங்களுக்கு நீடிக்குமாயின் பஞ்சத்தை தடுக்கமுடியாது.

கருங்கடலை முற்றுகையிட்டுள்ள ரஷ்யா, உக்ரேனில் இருந்து தானியக் கப்பல்களை வெளியே செல்லவிடாமல் தடுத்துவருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ள அவ்வமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோசப் போரெல், இது உலக உணவுப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றார்.

ரஷ்யா, உக்ரேன் போர், இலங்கையின் மீதும் நேரடியான தாக்கத்தை செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது. இங்கு எப்பக்கத்துக்கு ஆதரவளிப்பது என்பது முக்கியமானதாகும். ரஷ்யாவுக்கு ஆதரவளித்தால், அமெரிக்கா முரண்பட்டுக்கொள்ளும், உக்ரேனுக்கு ஆதரவளித்தால், இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளுடனான உறவில் ஓரளவுக்கேனும் விரிசல் ஏற்படும். இன்றேல், அவ்வாறான நாடுகளின் கோபத்துக்கு ஆளாகநேரிடும். இது, கிடைக்கும் உதவிகளையும் கிடைக்காமல் செய்துவிடும்.

நாட்டின் நெருக்கடிகளை உள்நாட்டு நெருக்கடியாக மட்டுமே கவனத்தில் எடுத்தோமெனில், தீர்வே கிடைக்காது. சர்வதேச இராஜதந்திரத்துக்குள்ளும் சென்று ஆராயவேண்டும். தற்போது உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கும் நாடுகளின் கைகளைக் 'கடித்து'விடக்கூடாது. அதேபோல, ஏனைய நாடுகளின் உதவி, ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள காய்நகர்த்த வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒவ்வொருவரையும் வாட்டி வதைத்துக்கொண்டு இருக்கின்றது. ஆகையால், தேவைக்கு அதிகமாக அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைத்துக்கொள்ளாமல் மற்றையவர்களுக்கும் தேவைப்படும் என்ற நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். பதுக்கி வைத்திருந்து கூடுதல் விலைக்கு விற்பனைச் செய்ய திட்டமிட்டிருக்கும் முதலாளிமார்களே! இது பண்டிகைக்காலம் அல்ல; பட்டிணிக்காலம் என்பதை நினைவில் கொள்க. பட்டிணிச்சாவுக்கு உலகமே முகங்கொடுக்கபோகும் இந்தக்காலத்தில், எந்தப்பொருளாக இருந்தாலும் வீணாக்காமல், தத்தமது தேவைக்காக மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதனூடாகவே, ஓரளவுக்கு சமாளித்துக்கொண்டு செல்லமுடியும் என்பதை சகலரும் நினைவில் கொள்ளவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# காரணம் கூற அரசாங்கம் எதற்கு?

மொஹமட் பாதுஷா

வரிசைகளில் நிற்பதே இலங்கையரின் விதி என்றாகி இருக்கின்றது. எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் தொட்டு, பலாக்காய் துண்டு வரை எல்லாவற்றுக்கும் நாட்கணக்காக காக்க வேண்டியிருக்கின்றது.

நீண்ட வரிசைகளில் நின்று, பலர் மரணித்து விட்டனர்; ஏகப்பட்டோர் மயங்கி விழுந்துள்ளனர். நாட்டு மக்கள் எல்லோரும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். கீழ் நடுத்தர மற்றும் ஏழ்மைக் குடும்பங்களில் வறுமை குடியேறி இருக்கின்றது. இரண்டு வேளை நிம்மதியாகச் சாப்பிடுவது கூட, கணிசமான மக்களுக்கு கனவாகி இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் அனைவரும், மக்களின் நெருக்கடிக்கான குறுங்கால தீர்வை முன்வைக்கவில்லை. இன்னும் காரணம் சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றனர். உருப்படியாக எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

எனவே, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கமும் அரச இயந்திரமும், தெளிவாகத் தோல்வி கண்டுள்ளன. நிலைமை இன்னும் மாறவில்லை. அதாவது, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியபோது இருந்த நிலைமைகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரான நிலைமைகளுக்கும் வித்தியாசங்கள் இல்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தந்தால், நாட்டை வெற்றிகரமாக ஆட்சி செய்வோம் என்றும் பசில் வந்தால் நாட்டைப் புரட்டிப் போடுவார் என்றும், 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றினால் மக்களுக்கான ஆட்சியை இன்னும் சிறப்பாகச் செய்யலாம் என்றும் ராஜபக்ஷ குடும்பம் சொன்னது.

அவையெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட போதும், அவர்கள் வெற்றிகரமாக ஆட்சிசெய்து காட்டவில்லை. அவர்கள் சுருட்டிக் கொண்டதுதான் மிச்சம்.

பிறகு ரணில் விக்கிரமசிங்க அல்லது பொருத்தமான வேறு யாராவது பிரதமராக வந்தால் எல்லாவற்றையும் ஒரு சில நாள்களுக்குள் தலைகீழாக மாற்றி விடுவார் என்று சொன்னார்கள். ஆனால், அதுவும் நடக்கவில்லை.

புதிய பிரதமர், மாய ஜாலத்தால் இந்த நெருக்கடிகளை தீர்த்துவிட முடியாது. ஏனெனில், ராஜபக்ஷர்கள் அப்படியான ஒரு 'பொறிக்குள்', இலங்கையை சிக்க வைத்துவிட்டுத்தான், ரணிலின் தலையில் நாட்டை கட்டியிருக்கின்றார்கள்.

ரணிலின் வருகைக்குப் பிறகு, இலங்கை ரூபாயின் பெறுமதி ஒரு துளி முன்னேற்றம் கண்டிருந்தாலும், அது சாதாரண மக்களுக்கு அவ்வளவு முக்கியமான விடயமல்ல. ஏனெனில், பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன; தட்டுப்பாடு தொடர்கின்றது; வரிசைகள் நீள்கின்றன.

எப்போது எரிபொருள் பவுசர் வரும் என்பது கூட நிச்சயிக்கப்படாத நிலையில், பல எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சுற்றி, பல கிலோ மீற்றர் தூரத்துக்கு வாகனங்கள், பல நாள்களாகத் தரித்து நிற்கின்றன.

தமது முக்கிய வேலைகளை எல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு, எரிபொருளுக்காக தவம் கிடக்கின்றார்கள். வாழ்வதற்கான இந்தப் போராட்டத்தில், வரிசையிலேயே இறந்து போகின்ற அவலங்களும் 'ஆசியாவின் ஆச்சரியமாக'த் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

எரிபொருளைப் போலவே எரிவாயு விநியோகமும் பல இடங்களில் நேர்மையான முறையில் இடம்பெறுவதில்லை. முகவர்கள் அற்பத்தனமாக நடந்து கொள்கின்றார்கள். அதுபோலவே, 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்ற தோரணையிலேயே அநேகமான வியாபாரிகள் செயற்படுவதையும் காண முடிகின்றது. உண்மையிலேயே, ராஜபக்ஷ குடும்ப ஆட்சியும் அவர்கள் ஊழல் செய்து நாட்டைக் கொள்ளையடித்ததும், சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில், ஒரு கட்டம் வரைக்கும் ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

ஆனால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பும் கடுமையான தட்டுப்பாடுகளும் வரிசைகளும் தோற்றம் பெற்று, மக்களை வருத்துகின்றன. மக்களின் வருமானம் அதிகரிக்காத சூழ்நிலையிலேயே இதுவெல்லாம் நடந்து வருகின்றன.

எனவே, நாட்டின் இந்த நெருக்கடிக்கு, முழுமுதல் காரணம் ராஜபக்ஷர்களின் ஆட்சி என உணரத் தொடங்கிய பிறகுதான், மக்கள் வீதிக்கு இறங்கினர். 'கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷர்கள் அனைவரும் வீட்டுக்குச் செல்ல வேண்டும்' என்று கோரி நின்றனர்; 'சேர் பெயில்' என்றனர்.

ஆயினும், புதிய பிரதமர் வந்த பிறகும் மக்களின் வாழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. வரிசைகள் அதிகரித்துள்ளன. பொருளாதார சிக்கலும் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்துள்ளன. வரிசைகளில் பலியாவோர் தவிர விரக்தியடைந்து தற்கொலையை நாடுவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றால், முறையான பொருளாதார திட்டமிடல் இல்லாததே அதற்குக் காரணமா? டொலர் கபளீகரம் செய்யப்பட்டதா? அல்லது, இரண்டும் காரணமா என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி, உயர் அதிகாரிகளும் அறிவார்கள். இது மக்களுக்கும் தெரிந்த இரகசியம்தான்.

மக்கள் அதிகாரத்தையோ ஆட்சியில் பங்கையோ கேட்கவில்லை. அவர்கள் இன்று வரையும், பொருட்கள் எல்லாவற்றுக்கும் பணம் செலுத்தியே கொள்வனவு செய்கின்றனர். கடனுக்கு வாங்குவதற்கோ கொள்ளையடிப்பதற்கோ, அவர்கள் வரிசைகளில் நிற்கவில்லை.

ஆனால், டொலர் நெருக்கடி இன்னும் தொடர்கின்றது. அதாவது, ரூபாயை டொலராக மாற்றுவதற்கு, அவசியமான ஏனைய பொருளாதார குறிகாட்டிகளில் இன்னும் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதில் ஒரு நியாயமுள்ளது. ஆனால், நாட்டுக்குள் செலவழிக்க ரூபாயும் இல்லை என்று கூறுவதன் நியாயம்தான் என்ன?

ஒரு ஜனாதிபதியை, பிரதமரை, எம்.பிக்களை மக்கள் தெரிவு செய்கின்றார்கள் என்றால், அது அவர்கள் தம்மை சரியாக ஆட்சி செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையில்தான். இது அவர்களது கடமை ஆகும். அரசாங்கம், மக்களுக்கு புண்ணியத்தில் சேவையாற்றவில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறிருக்க, ஊடகத்தில் தோன்றி, பிரச்சினைகளுக்கான காரணத்தைச் சொல்வதும், இன்னும் சில வாரங்களுக்கு சிரமப்பட வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை செய்வதும் நல்ல ஆட்சியாளர்களின் பண்பல்ல.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி அப்படியான உரைகளையே ஆற்றிக் கொண்டிருக்கின்றார். ஜனாதிபதி கோட்டாபயவும் தம் பங்கிற்கு வந்து கதைத்து விட்டுப் போகின்றார். அமைச்சர்களும் முன்னுக்குப் பின் முரணாக கதைவிடுகின்றனர். இதன்மூலம் இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

ஒன்று, மிகக் குறுகிய காலத்தில் அவர்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை, அவர்கள் மக்களுக்கு குறிப்பால் உணர்த்த முற்படுகின்றார்கள். இரண்டாவது, 'நாங்கள் ஏற்கெனவே எச்சரிக்கை செய்தோம்தானே' என்று சொல்லி, பொறுப்புக் கூறலில் இருந்து நழுவிவிட இப்போதே ஏற்பாடு செய்கின்றார்கள். இது மறுபுறத்தில், மக்களுக்கு எதிர்காலம் பற்றிய அச்சத்தையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் முதற்கொண்டு அதிகாரிகள் வரை, ஆளுக்காள் 'பந்துகளை கைமாற்றி விட்டு' பொறுப்பில் இருந்து நழுவ முற்படுவதை வெளிப்படையாகவே காண முடிகின்றது.

"நாட்டின் இந்த நிலைமைக்கு, முன்னைய அரசாங்கமே காரணம்" என்று ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் கூறப்பட்ட போது, அதனை ஆட்சேபித்த ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இப்போது பிரதமராக பதவியேற்ற பின்னர், மேற்குறிப்பிட்ட கருத்துடன் உடன்படுவதாகத் தெரிகின்றது.

ராஜபக்ஷர்களின் திட்டமிடலற்ற, குறுகிய மனப்பாங்குடைய ஆளுகையே நாட்டின் இந்த இழிநிலைக்கு காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதில் பசில் ராஜபக்ஷவும் முக்கியமானவர். அதனை மொட்டுக்காரர்களே கூறி வருகின்றார்கள்.

ஆனால், மக்கள் இத்தனை துக்கத்தில் இருக்கின்ற போது, பசில் எந்தவித பொறுப்புக்கூறலும் இன்றி, சிரித்துக் கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததை கண்டோம்.

அதுமட்டுமன்றி. "எங்களுக்கு இந்த ஆணையை தந்தமைக்காக, மக்களும் பொறுப்புக்கூற வேண்டும்" என்று மிகவும் அபத்தமான கருத்தொன்றையும் அவர் சொன்னார். அதாவது, அந்த 69 இலட்சம் பேர்தான் இந்த நிலைமைக்குக் காரணம் எனச் சொல்லாமல் கூறிவிட்டுப் போனார்.

மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பிறகு, அவர் மீதான விமர்சனங்கள் குறைந்து விட்டன. பசிலும் பொறுப்புக் கூறப்போவதில்லை. ரணில் பிரதமராக வந்த பிறகு, ஜனாதிபதி கோட்டாபய மீதான எதிர்ப்பலையும் சில சர்வதேச நாடுகளின் துணைகொண்டு அடங்கிப் போயுள்ளது.

இன்னும் சில வருடங்களில், 'ரணில்தான் காரணம்' என்று அவர்கள் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்போது விக்கிரமசிங்க, இன்னுமொரு பெருந்தேசிய தலைவர் மீது பழியைப் போட்டு விட்டுப் போய்விடுவார். மக்கள்தான் மாட்டிக் கொள்வார்கள்.

இதைத்தான் பல அரச உயர் அதிகாரிகளும் தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கின்றார்கள். மத்திய வங்கி ஆளுநர்கள், லிற்ரோ கேஸ் தலைவர்கள், மின்சார சபை தலைவர் போன்றோர் அண்மைக்காலத்தில் வெளியிட்ட கருத்துகள் இதற்கு சில பதச்சோறுகளாகும். "நான் பொறுப்பில்லை; அவர்தான் பொறுப்பு" என்று சொல்கின்ற இதுபோன்ற அதிகாரிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

ஆட்சியாளர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு இவைதான் காரணம் என ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்ற விடயங்களை மட்டுமன்றி, நீங்கள் வெளிப்படையாகப் பேசாத காரணிகளையும் மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள்.

எனவே, மக்களுக்கு இன்று தேவை, வரிசைகளுக்கும் விலையேற்றங்களுக்கும் ஒரு முடிவாகும். அன்றாட வாழ்வியல் நெருக்கடிக்கு விரைவான தீர்வாகும். அதைவிடுத்து, வானிலை அறிக்கை போன்ற அச்சமூட்டும் எதிர்வுகூறல்களோ, பொறுப்புக்கூறலில் இருந்து விலகும் பாங்கிலான 'காரணம் கூறல்களோ' அல்ல!



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரை அலட்சியப்படுத்துவதும் அவமானப்படுத்துவதும் ஒன்றேதான். உங்களை அலட்சியப்படுத்துபவரை, வேறொரு நபர் அவமானப்படுத்தினால், அவரது நெஞ்சம் எப்படி இருக்கும்?

தங்களுக்கு மட்டுமே ரோசம், மானம் இருப்பதாக சிலர் நினைத்துக் கொள்கின்றனர். உணர்வு மனிதர்களுக்குப் பொதுவான அனுபவமே! எவரையும் வைதலாகாது. அதைக் கேட்பவருக்கு நெஞ்சத்தை உடைத்து நொருக்குவதற்கு மேலானதாகும். அன்புடன் பேசினால் அதைக் கேட்டுக்கொள்பவர், இறும்பூது எய்துகின்றார். அப்படி இருக்கும்போது, யாவருமே சகலருடனும் அன்பைப் பகிர்ந்தால், ஒற்றுமை நேயங்கள் விஸ்தரிக்கப்படும். அதுவே, எல்லோரும் இதேவழியில் செயற்பட்டால், வையகம் ஒரே குழுவாகிவிடும். தங்களுக்கு நிகரானவர்களை மட்டும் கௌரவப்படுத்தும் சிலர், வறியவர்கள், தமக்குப் பிடிக்காதவர்களைக் கண்டால், முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விடுவார்கள். எல்லோருக்கும் எல்லோரையும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தேவைப்படும். இது இயற்கை. ஏதோவொரு நிலையில், பலரையும் சந்தித்துக்கொண்டே இருக்கின்றோம். காண்பவர்களை முகமலர்வுடன் நோக்குவது நல்லது அல்லவா!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிபர்களை இடமாற்றுங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரே பாடசாலையில் நீண்ட காலமாக பணியாற்றுகின்ற அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாமல் இருப்பது தொடர்பாக, பெற்றோரால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு கல்வி வலயங்களில் 104 வரையான பாடசாலைகள் இயங்குகின்றன. 33,000 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்நிலையில் ஏழாண்டுகள் கடந்த நிலையிலும், ஒரே பாடசாலையில் அதிபர் பணியில் இருப்பதன் காரணமாக, பாடசாலைகளில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைகளில், 'அதிபரை மாற்றுங்கள்' என, பெற்றோரால் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், வலயக் கல்விப் பணிமனை உரிய நடவடிக்கை எடுக்காமல், ஒரே பாடசாலையில் நீண்ட காலமாக அதிபர்களை பணிக்கு நியமித்துள்ளது.

இதன் காரணமாக பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அதிபர்களுக்கு இடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஓர் அதிபருக்கு ஒரு பாடசாலையில் ஏழாண்டுகள் பணி முடிந்ததும், இடமாற்றம் வழங்குவதே மிகப் பொருத்தமாக இருக்கும் என பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நகரத்தில் உள்ள பாடசாலைகளில் கூட, ஏழாண்டுகள் கடந்தும் ஒரே பாடசாலையில் அதிபர்கள் பணியில் இருப்பதன் காரணமாக, வலயக் கல்விப் பணிமனைக்கு தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. வலயக் கல்விப் பணிமனையும் பெற்றோரின் கடிதங்களுக்கு உரிய பதில்கள் வழங்குவதில்லை என்ற குறைபாடுகளும் பெற்றோரால் சுட்டிக்காட்டப்படுகின்றன.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை

தமிழ்நாட்டுக்கு வந்த ஈழத்தமிழர்களை

# அகதிகளாக அறிவிக்கவும்

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஈழத்தமிழர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசு கடிதம் எழுதி, இரண்டு மாதங்களாகியும் அதன் மீது மத்திய அரசு இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் டொக்டர் அன்புமணி ராமதாஸ், அதனால், ஈழத்தமிழர்களுக்கு உதவிகள் வழங்க முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.



உலக அகதிகள் நாள் இன்றாகும் (நேற்று). நாடற்றவர்களாக மாறியவர்களின் நலன்களைக் காப்பதற்காகவும், அவர்களின் துணிச்சலைப் போற்றுவதற்காகவும் தான் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. ஆனால், பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வந்த ஈழத்தமிழர்களின் நிலை என்னவென அவர் கேட்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த மூன்று மாதங்களில் 90 ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர். ஆனால், அவர்கள் இதுவரை அகதிகளாக அறிவிக்கப்படவில்லை. சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து வந்த தமிழர்களின் துயரம் தீர்க்கப்பட வேண்டும். அவர்களை அகதிகளாக அறிவித்து உதவிகளை வழங்க வேண்டும். தமிழகத்தில் ஏற்கெனவே உள்ள அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

சேலம்

## கணவன் பிரசவம் பார்த்ததில் தாயும் சேயும் பலி

நான்காவது கர்ப்பமானது உறவினர்களுக்கு தெரியாமல் இருக்க, மலைக்கரட்டில் கணவனே சுயமாக பிரசவம் பார்த்ததில், குழந்தை இறந்து பிறந்ததுடன், தாயும் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



பார்வதி (35). இவருக்கும் நாமக்கலைச் சேர்ந்த ஒருவருக்கும் திருமணமாகி, 12 வயதில் ஒரு மகன் உள்ளான். சில ஆண்டுகளுக்கு முன்பு கணவனை பிரிந்த பார்வதிக்கு, ராசிபுரம் பகுதியைச் சேர்ந்த பூபதி (25) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.

திருமணம் செய்து கொண்ட இருவரும், கட்டட வேலைக்கு சென்று வந்தனர். இவர்களுக்கு 3 வயதில் ஓர் ஆண் குழந்தையும், 2 வயதில் பெண் குழந்தையும் உள்ளனர். அத்துடன், முதல் கணவனுக்கு பிறந்த 12 வயது மகனையும் இவர்கள் வளர்த்து வந்தனர். பார்வதி மீண்டும் கர்ப்பமடைந்தார். எட்டு மாத கர்ப்பிணியான பார்வதிக்கு, பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. யாருக்கும் தெரியாமல் குழந்தையை பிரசவிக்க, அருகில் உள்ள மலைக்கரட்டிற்கு, பார்வதியை பூபதி அழைத்துச் சென்றார்.

அங்கு பூபதியே பார்வதிக்கு பிரசவம் பார்த்துள்ளார். இதில், அவருக்கு பெண் குழந்தை இறந்தே பிறந்ததாக கூறப்படுகிறது. இதனிடையே, பார்வதிக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டு சிறிது நேரத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். அவ்வழியாக சென்றவர்கள் அளித்த தகவலின் பேரில், பொலிஸார் வந்து பூபதியிடம் விசாரணை நடத்தினர். பின்னர், தெரிந்தே உயிரிழப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டது, பெண் சிசு இறப்பை தெரிவிக்காமல் புதைத்தது ஆகிய இரு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிந்து பூபதியை கைது செய்தனர்.

பூபதி அளித்த வாக்குமூலத்தில், "ஏற்கெனவே 3 குழந்தைகள் உள்ள நிலையில், பார்வதி 4வது முறையாக கர்ப்பமடைந்தார். இது வெளியே தெரிந்தால் அவமானமாகி விடும் எனக் கருதி, யாருக்கும் சொல்லவில்லை. பார்வதிக்கு பிரசவ வலி ஏற்பட்டதால், தனிமையான இடத்தில் பிரசவித்து, குழந்தையை ஏதேனும் செய்துவிடலாம் என எண்ணி, கரடு பகுதிக்கு இருவரும் சென்றோம். ஆனால், குழந்தை இறந்தே பிறந்துவிட்டது. ஏற்கெனவே முடிவெடுத்தபடி, அருகில் உள்ள புதர் பகுதியில் குழந்தையை புதைத்து விட்டு வந்தேன். பின்னர் பார்வதியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயன்றபோது, உயிரிழந்து விட்டார்" என தெரிவித்ததாக பொலிஸார் கூறினர்.

புதுடெல்லி:

போலி சீன நிறுவனங்களுக்கு உதவி

## 400 கணக்கர்கள், செயலர்கள் மீது நடவடிக்கை

லடாக் பகுதியில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் 2020 ஆம் ஆண்டு எல்லைப் பிரச்சினை தீவிரமடைந்தது. அப்போது ஏற்பட்ட மோதலில் 20 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்தியாவில் செயல்படும் சீன நிறுவனங்கள் மீதும் சீன தயாரிப்புகள் சார்ந்தும் மத்திய அரசு கடும் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது.

எனினும், சீனாவைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் போலி நிறுவனங்கள் தொடங்கும் முயற்சியை மேற்கொண்டுவந்தனர். இவர்களுக்கு இந்தியாவைச் சேர்ந்த பட்டயக் கணக்கர்கள், நிறுவனச் செயலர்கள் உதவி வழங்கிவருவதாக மத்திய நிறுவன விவகாரத் துறை அமைச்சகத்துக்கு முறைப்பாடுகள் வந்தன.

அதையடுத்து மேற்கொண்ட விசாரணையில், இந்திய பெரு நகரங்களில் நிறுவனத்தைப் பதிவு செய்ய, சீன போலி நிறுவனங்களுக்கு விதிகளை மீறி உதவியதாக 400 பட்டயக் கணக்கர்கள், செயலர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி நிறுவன விவகாரத் துறை சம்பந்தப்பட்ட அமைப்புகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

புவனகிரி

## பலாப்பழத்துடன் குளிர்பானம் பருகிய சிறுவன் பலி

பலாப்பழத்துடன் குளிர்பானம் பருகியதால் ஏற்பட்ட உணவு ஒவ்வாமைக்குப் பின்னர், சிகிச்சை பெற்று வந்த, 6 வயது சிறுவன் மரணமடைந்துவிட்டார். எனினும், பாதிக்கப்பட்ட தாய், மகள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.
கடலூர் மாவட்டம், புவனகிரியைச் சேர்ந்த இவர்கள் மூன்றுபேரும், சனிக்கிழமை (18) மாலை வீட்டில் உணவுடன், பலா சுளை சாப்பிட்டு, குளிர்பானம் அருந்தியுள்ளனர்.

சற்று நேரத்தில் மூவரும் வாந்தி எடுத்து மயங்கியுள்ளனர். அதனையடுத்து மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில், சிறுவன் மரணித்துவிட்டார்.

சென்னை

## பாதுகாப்பு கேட்டு மனு

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) செயற்குழு, பொதுக்குழு ஜூன் 23 ஆம் திகதி சென்னை, வானகரம் ஶ்ரீவாரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஒற்றைத் தலைமை விவகாரம் அக்கட்சியில் எழுந்துள்ள நிலையில், பன்னீர்செல்வம், பழனிசாமி ஆதரவாளர்கள் தனித்தனியாக ஆலோசனை செய்து வருகின்றனர்.



இந்த நிலையில் அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலருமான பெஞ்சமின், அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்திற்கு பாதுகாப்பு அளிக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மும்பை

மாற்றுத்திறனாளி சிறுமி மானபங்கம்

## குடியிருப்புக்குள் நுழைய வாலிபருக்கு தடை

மும்பையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 11 வயது மாற்றுத்திறனாளி சிறுமி குடும்பத்துடன் வசித்து வருகிறாள். அச்சிறுமி அவளது வீட்டுக்கு வெளியே மே.5 ஆம் திகதி விளையாடிக் கொண்டு இருந்தாள். சிறுமியுடன் விளையாடி கொண்டு இருந்த தோழி, திடீரென வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

இந்த நேரத்தில் அதே குடியிருப்பில் வசிக்கும் 21 வயது வாலிபர் அங்கு வந்துள்ளார். சிறுமியின் சக்கர கதிரையை தனக்கு அருகில் இழுத்து, சிறுமியை மானபங்கம் செய்ய முயற்சித்துள்ளார். சிறுமி எதிர்ப்பு தெரிவித்ததால் வாலிபர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

அதன்பின்னர், போக்சோ சட்டத்தின் கீழ், அந்த வாலிபருக்கு எதிராக மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வாலிபருக்கு பிணை வழங்கப்பட்டது. எனினும், வழக்கு விசாரணை முடியும் வரை சிறுமி வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்திற்குள் செல்ல கூடாதென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# நெற்றியில் நாமத்துடன் நடிகை

விக்ரம்' திரைப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக 3 நடிகைகள் நடித்து இருந்த நிலையில் அதில் ஒருவர் பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமான ஷிவானி நாராயணன்.





இந்த நிலையில் அண்மையில் இவர் திருப்பதி சென்ற புகைப்படங்களை பதிவு செய்து உள்ளார். 12 வருடங்களுக்கு பின் திருப்பதி சென்று உள்ளதாகவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடிகை ஷிவானி நாராயணன் நடித்த 'வீட்டில் விசேஷம்' திரைப்படம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியான நிலையில் தற்போது அவர் விஜய் சேதுபதியின் 46ஆவது படம், 'பம்பர்' மற்றும் வைகை புயல் வடிவேலு நடித்து வரும் 'நாய்சேகர் ரிட்டர்ன்ஸ்' ஆகிய திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

# 'இறைவன்' விரைவில் தரிசனம்

இயக்குநர் அகமது - ஜெயம் ரவி கூட்டணியில் 'ஜன கன மன' திரைப்படம் பாதியிலேயே நிற்கிறது. பெரும்பாலான காட்சிகள் எடுக்கப்பட்ட நிலையில், வெளிநாட்டில் எடுக்கப்பட வேண்டிய காட்சிகள் மட்டும் மீதமிருப்பதாக கூறப்படுகிறது.



இதற்கிடையே ஜெயம் ரவி, நயன்தாராவை வைத்து 'இறைவன்' என்னும் திரைப்படத்தை அகமது இயக்கி வந்தார். கொரோனா காரணமாக தள்ளிப்போன படப்பிடிப்பு தற்போது சத்தமே இல்லாமல் வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது.

வரும் தீபாவளி அன்று திரைப்படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. அதே நாளில் கார்த்தி நடித்துள்ள சர்தார் திரைப்படமும் வெளியாகிறது.



# பூஜா ஹெக்டேவின் புதிய கவர்ச்சி

தமிழ் சினிமாவில் முகமூடி திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. அதன்பின்னர், பீஸ்ட் திரைப்படத்தின் மூலம் மீண்டும் தமிழில் களம் இறங்கினார். தெலுங்கில் பிரபாஸ், இந்தியில் சல்மான் கான் என பல்வேறு மொழிகளில் முன்னணி ஹீரோக்களுடன் நடித்து முன்னணி நடிகையாக வலம் வருகிறார்.





தற்போது தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் முன்னணி நடிகையாக உருவெடுத்துள்ளார். அாண்மையில் இவர் நடிப்பில் வெளியான ராதே ஷ்யாம், பீஸ்ட், ஆச்சார்யா ஆகிய திரைப்படங்கள் கலவையான விமர்சனங்கள் பெற்றது. தற்போது இவர் கைவசம் விஜய் தேவரகொண்டா நடிக்கும் ஜன கன மன உள்ளது.

இந்தநிலையில், சமூக வலைத்தளத்தில் ஆக்டிவாக இருக்கும் பூஜா ஹெக்டே அவ்வப்போது கவர்ச்சி புகைப்படங்களை பதிவிடுவதை வழக்கமாக வைத்துள்ளார். தற்போது பூஜா ஹெக்டே தனது சமூக வலைத்தள பக்கத்தில் சட்டையில் கவர்ச்சி காட்டும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

# பிரியங்கா விவாகரத்து?

விஜய் டிவி தொகுப்பாளினி மற்றும் பிக்பாஸ் நிகழ்ச்சியின் போட்டியாளர்களில் ஒருவரான பிரியங்கா கடந்த சில ஆண்டுகளாக கணவர் பிரவீன் குறித்து பேசாமல் இருப்பதும் கணவருடன் இணைந்த புகைப்படத்தை வெளிவிடாமல் இருப்பதும் இருவரும் பிரிந்துவிட்டதாக வதந்தியை கிளப்ப காரணமாக உள்ளது.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது ஃப்ரீஸ் டாஸ்க்கில் கூட பிரியங்காவின் கணவர் வரவில்லை என்பதும் அவரது தாயார் மட்டுமே வருகை தந்திருந்தார் என்பதும் தெரிந்ததே.

அதேபோல் பிக்பாஸ் நிகழ்ச்சியின் போதும், பிக்பாஸ் நிகழ்ச்சி பின்னரும் கணவர் பிரவீன் குறித்த கேள்விக்கு பிரியங்கா மழுப்பலாக பதில் சொல்லி வந்தார் என்பதும் கணவர் குறித்து அடுத்த பதிவில் சொல்கிறேன் என்று கூறிய பிரியங்கா இதுவரை அவரைப் பற்றி எந்த விவரங்களையும் வெளியிடாமல் இருக்கிறார்.

அண்மையில் பிரியங்காவின் சகோதரருக்கு குழந்தை பிறந்த நிலையில் அந்த குழந்தையுடன் பிரியங்கா கொஞ்சிய புகைப்படங்கள் வெளிவான நிலையில் கூட அவரது கணவர் பிரியங்காவின் அருகில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பிரியங்கா கூறிய பதில் அவர் தனது கணவரை விவாகரத்து செய்து விட்டாரா? இல்லையா? என்ற குழப்பத்தை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

பிரியங்காவிடம் ஒரு ரசிகர், 'திருமணமான பிறகு எல்லாவற்றையும் எப்படி சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்ட கேள்விக்கு 'நம்மை புரிந்து கொள்ளும் கணவர் இருந்தால், கணவருக்கு நாம் விசுவாசமாக இருந்தால் எல்லாம் சாத்தியம் தான்' என்று பதில் கூறியுள்ளார்.

இந்த பதில் இருந்து ப்ரியங்கா கணவரை பிரியவில்லை என்பது போல் இருந்தாலும் கணவருடன் உள்ள புகைப்படத்தை அவர் பல ஆண்டுகளாக வெளியிடாமல் இருப்பது ரசிகர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.










மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும் இலங்கை வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ட்ரெவிஸ் ஹெட் ஆட்டமிழக்காமல் 70 (65), ஆரோன் பின்ஞ் 62 (85), அலெக்ஸ் காரி 49 (52), கிளென் மக்ஸ்வெல் 33 (18) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜெஃப்ரி வன்டர்சே 3, டுனித் வெல்லலாகே 1, தனஞ்சய டி சில்வா 1, துஷ்மந்த சமீர 1 விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு 292 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 137 (147), குசல் மென்டிஸின் 87 (85) ஓட்டங்களோடு 48.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஜ்ஹை றிச்சர்ட்ஸன் 2, ஜொஷ் ஹேசில்வூட் 1, கிளென் மக்ஸ்வெல் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.


இப்போட்டியின் நாயகனாக பதும் நிஸங்க தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி இன்று (21) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

முதலாவது டெஸ்டில்

# பங்களாதேஷை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்



பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், அன்டிகுவாவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளால் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

நேற்று முன்தின நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், மேலதிகமாக விக்கெட் எதையும் இழக்காமலே 84 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை அடைந்தது. ஜோன் கம்பெல் ஆட்டமிழக்காமல் 58, ஜேர்மைன் பிளக்வூட் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக கேமார் றோச் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பங்களாதேஷ்: 103/10 (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் 51, தமிம் இக்பால் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேடன் சியல்ஸ் 3/33, அல்ஸாரி ஜோசப் 3/33, கைல் மேயர்ஸ் 2/10, கேமார் றோச் 2/21)

மே. தீவுகள்: 265/10 (துடுப்பாட்டம்: கிறெய்க் பிறத்வெய்ட் 94, ஜேர்மைன் பிளக்வூட் 63, என்குறுமஹ் பின்னர் 33, ஜோன் கம்பெல் 24, குடகேஷ் மொட்டி ஆ.இ 23 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/59, எபொடொட் ஹொஸைன் 2/65, காலிட் அஹ்மட் 2/59, முஸ்தபிசூர் ரஹ்மான் 1/30, ஷகிப் அல் ஹஸன் 1/48)

பங்களாதேஷ்: 245/10 (துடுப்பாட்டம்: நுருல் ஹஸன் 64, ஷகிப் அல் ஹஸன் 63, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 42, தமிம் இக்பால் 22, லிட்டன் தாஸ் 17, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 17 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 5/53, அல்ஸாரி ஜோசப் 3/55, கைல் மேயர்ஸ் 2/30)

மே. தீவுகள்: 88/3 (துடுப்பாட்டம்: ஜோன் கம்பெல் ஆ.இ 58, ஜேர்மைன் பிளக்வூட் ஆ.இ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 3/27)

போட்டியின் நாயகன்: கேமார் றோச்



# கனேடிய குராண் பிறீ: வென்ற வெர்ஸ்டப்பன்

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கனேடிய குராண் பிறீயில் றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

இரண்டாமிடத்தை பெராரி அணியின் கார்லோஸ் சைன்ஸ் ஜூனியர் பெற்றதோடு, மூன்றாமிடத்தை மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் பெற்றிருந்தார்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 175 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் உள்ளதோடு, இரண்டாமிடத்தில் றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் 129 புள்ளிகளுடன் காணப்படுவதோடு, மூன்றாமிடத்தில் 126 புள்ளிகளுடன் பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் காணப்படுகின்றார்.

நற்பிட்டிமுனை ஆர்.கே.ஆர் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம்

நூருல் ஹுதா உமர்



அம்பாறை மாவட்டத்தின் பலம் வாய்ந்த 32 அணிகள் பங்கு பற்றிய அணிக்கு 9 பேர், 5 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நற்பிட்டிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில், சம்மாந்துறை அல்- ஹுதா விளையாட்டுக் கழகத்தை வென்றே பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பிளாஸ்டர், தாம் முதலில் களத்தடுப்பிலீடுபடுவதாக அறிவித்தது. அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்- ஹுதா, 5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 41 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பிளாஸ்டர் 4.2 ஓவர்களிலே வெற்றியிலக்கையடைந்தது.

இத்தொடரின் நாயகனாக பிளாஸ்டரின் அணித்தலைவர் ஏ.என்.எம். ஆபாக் தெரிவானதுடன், இறுதிப் போட்டியின் நாயகனாக அதே கழக சிரேஷ்ட வீரர் எம்.ஜே.எம். தாஜுதீன் தெரிவானார்.

சம்பியனான பிளாஸ்டருக்கு 15,000 ரூபாய் பணப் பரிசும், வெற்றிக் கேடயமும், இரண்டாமிடம் பெற்ற அல்- ஹுதா விளையாட்டுக் கழகத்துக்கு 7,000 ரூபாய் பணப் பரிசும் வெற்றி கிண்ணமும் வழங்கப்பட்டது.

நைஜீரியா

# 155 பேரின் உயிரைப் பறித்த லாசா



நைஜீரியாவில் லாசா காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 155 ஆக உயர்வடைந்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் எலிகளால் பரவ கூடிய லாசா காய்ச்சல் பாதிப்பு தீவிரமடைந்து வருகிறது.

குறிப்பாக வீட்டின் உணவு அல்லது பொருட்களின் மீது மேஸ்டோமிஸ் என்ற ஒரு வகை எலிகளின் கழிவுகள் கலக்கும்போது, மனிதர்களுக்கு இத் தொற்று பரவுவதாகவும், இக்காய்ச்சல் சில சமயங்களில் மலேரியாவை ஒத்த அறிகுறிகளை (காய்ச்சல், மயக்கம், பலவீனம் அடைதல் மற்றும் தலைவலி ) வெளிப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து நைஜீரிய நோய் கட்டுப்பாட்டு மையம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் , "நாடு முழுவதும் அரசு தொற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், நடப்பு ஆண்டில் லாசா காய்ச்சல் பாதிப்புக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 155 ஆக உயர்வடைந்துள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆண்டு தொடக்கத்தில் இருந்து, 782 பேருக்கு லாசா காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும், இதுதவிர, 4,939 பேருக்குப் பாதிப்பு இருக்க கூடும் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

# சீக்கிய வழிபாட்டு தலம் மீது தாக்குதல்

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் உள்ள குருத்வாரா என்னும் சீக்கிய வழிபாட்டுத்தலத்தில் கடந்த 18 ஆம் திகதி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களைக் குறிவைத்து பயங்கரவாதிகளால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 7 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், , இத்தாக்குதலுக்கு ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பங்களாதேஷ்



# கடும் மழையால் 41 பேர் உயிரிழப்பு

பங்களாதேஷின் வடகிழக்கு பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக கடும் மழை பெய்து வருவதோடு, இதன் காரணமாக

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்நாடு கடந்த 122 ஆண்டுகளில் கண்டிராத அளவுக்கு மிகவும் மோசமான வெள்ள பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில்ஹெட் மற்றும் சுனம்கஞ்ச் ஆகிய இரு மாவட்டங்களும் மழை, வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு 1000 க்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும் இதனால் வீடுகளை இழந்த மக்கள் பாடசாலைகளில் முகாம் அமைத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக் கனமழை காரணமாக இதுவரை சிறுவர்கள் உட்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சுமார் 40 லட்சம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் முழு வீச்சில் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்பெயின்

# ஸ்பெயின் மக்களை வாட்டும் வெப்பம்

பெயினில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இம் மாதம் வெப்ப நிலை உயர்வடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்நாட்டின் சில பகுதிகளில் 40 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதுடன், இரவு நேர வெப்பநிலையும் வழக்கத்திற்கு மாறாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலைநகர் மாட்ரிட்டில் நீரூற்றுகளில் நனைந்து விளையாடியும், மரங்களின் நிழலில் படுத்தும் அப்பகுதி மக்கள் வெப்பத்தைத் தணித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில் இருந்து வரும் சூடான காற்றோட்டமே தீவிர வெப்பத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்கா



# நாடு கடத்தப்படும் ஜூலியன் அசாஞ்சே?

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளின் போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பான ரகசிய ஆவணங்களை ஹேக் செய்து விக்கி லீக்ஸ் இணையதளத்தில் வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே.

இவ்விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளின் காரணமாக சுமார் 7 ஆண்டுகளாக இங்கிலாந்தில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் பதுங்கியிருந்த அசாஞ்சே கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் தென்கிழக்கு லண்டனில் பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டார்.

தாய்லாந்து

# ஒரே பாலினத் திருமணம் சட்டமாகிறது



ஒரே பாலினத் திருமணங்களைச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்த ஆசியாவின் முதல் நாடு என்ற பெருமையை கடந்த 2019 ஆம் ஆண்டு தாய்வான் பெற்றது.

இந்நிலையில் இதற்கு அடுத்தபடியாக இப்போது தாய்லாந்து ஒரு நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆசியாவிலேயே மிகவும் அதிக அளவிலான லெஸ்பியன், ஓரினச்சேர்க்கையாளர்கள், இருபால் ஈர்ப்பினர் மற்றும் திருநங்கைகள் (LGBT) ஆகியோர் தாய்லாந்திலேயே காணப்படுகின்றனர். அத்துடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சிறந்த இடமாக தாய்லாந்து உள்ளதோடு, மக்களை தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்ட நாடாகவும் விளங்குகிறது.

எவ்வாறு இருப்பினும் தாய்லாந்தில், LGBT சமூகத்தினருக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாகவும் சமூக ஆர்வலர்கள் நீண்ட காலமாகத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமையன்று LGBT சமூகத்தினர் சார்பாக நான்கு சட்ட வரைவுகள் சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களின் திருமணங்களுக்கான வரையறைகளையும், வழிமுறைகளையும் தீர்மானிக்க 25 பேர் கொண்ட சிறப்பு குழு அமைக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவிக்கபடடப்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 21 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.